REGD. No M. 2913.

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா ...	ரு. 50
ஒரு வருஷ சந்தா ...	ரு. 3
ஆறுமாத சந்தா ...	ரு. 1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரு. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரு. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரு. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்ரம-ஹூ கார்த்திகை-மீ 27உ 1940-ஹூ டிஸம்பர்-மீ 12உ | ஸ-48

வாரக்குறிப்புகள்

ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா

ஸபைதிந கோண்டாட்டம் ! முத்யால் பேட்டை வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கம் அமரகலாவிலாஸினீ ஸபை இவைகளின் ஆதரவில் ஞாயரன்று ஓர் கூட்டம் கூடி திருவண்ணாமலையில் நடக்கும் மாகாண ஸபைக்கு 9 பேரை தேர்ந்தெடுத்து அந்த திநத்தை ஸ்ரீ ஸோமதேவ சர்மா தலைமையில் சென்னையில் கொண்டாட தீர்மானித்தது.

[illegible] கேற்றபடி !! ஸ்ரீ கீதாசார்யனுக்கு ஷோடசோபசார பூஜை செய்து அவர் திருவடியில் ஞாயரன்று ஸ்ரீ கீதாசார உபாந்யாசம் நடைபெற்று இந்நூல்களை வைத்து ஆசிரியர் அதன் வரலாற்றைக் கூற பலரும் அதை ஆமோதித்து 160 பக்கங்களுடன் கண்ணனது அழகிய படம் ஸ்ரீ சிவாநந்தர் பிரும்மஸ்ரீ சுவேதாரண்யம் நாராயணயஜ்வா ஆசிரியர் இவர்கள் படமும் சேர்ந்திருப்பதைக் கொண்டாடினர்.

பொருத்தமானது !! டில்லியில் தோட்டிகள் ஆலயத்திற்கு திருவாங்கூர் திவான் அஸ்திவாரக்கல் நாட்டினர் ! மிக அழகு

இரு துருஷ்கர்கள் கூற்று !! பாம்பேயில் ஹைதராபாத் நிர்வாஹ ஸபை அங்கத்தினர் இந்தியா வேதாந்தத்தால்தான் உன்னதகதி அடையுமென்றார். சென்னை துருக்க மாஜிஸ்ட்ரேட் கீதையை ராஜாஜி சிக்ஷையின்போது கூறினர். உண்மை என்ன?

நீட்டியதைகயை அவமதிக்காதே !! தார்மிகர்களை அலக்ஷ்யம் செய்யுங்காலம் போய் விட்டது! காங்கரஸோ ஹிந்துமஹா ஸபையோ தார்மிகர் உதவியும் ஒத்துழைப்புமின்றி ஒன்றையும் ஸாதித்துவிட முடியாது. காங்கிரஸ் சற்று விலகியே செல்கிறது. நமது தலைவர்கள் ஆதரவை, ஒழுங்காக நடந்தால் ஹிந்துமகாஸபை பெறலாம்.

முன்னமே உஷார் வேண்டாமா? தாராசாரமுள்ள பெண்களைச் சீர்திருத்த உஷார் சங்கம் கவர்னர் தலைமையில் நடக்கிறது. இச்சபையின் செயல் விஷமரத்தின் கிளையை வெட்டுவதாயிருக்கிறது. வேரை அகற்ற பெண்கலாசாலையில் கற்பரசி சரிதம் கட்டாய பாடமாக்க வேண்டும்!

நாவலை நிறுத்தி நல்லநூல்களைப் படிக்கவும்!! ஸ்ரீ கீதாசாரமும் பாத்ம புராணக் கதைகளும் என்பது படிப்பதற்கு மிகரஸமாக இருப்பதால் கதைகளுடன் பல தர்மங்களும் சேர்ந்திருப்பதால் ஒவ்வொருவரும் அவச்யம் படிக்கவேண்டும். நமது ஆர்யதர்மம் ஆபீஸிலும் கிடைக்கும். வெளியூருக்கு வி. பி. செலவு அதிகமாகும் 7½ அணா ஸ்டாம் பனுப்பி N. ராஜம் கம்பெனி 43, புரசபாக்கம் ஹைரோட் வெப்பேரி என்ற விலாஸத்தில் பெறலாம்.

ஓர் முடிவிற்கு வந்தால் நலம் !! ஹிந்து மஹா ஸபை விஷயமாக நம் தலைவர்களுக்குள் மாறுபட்ட அபிப்ராயமிருப்பதாக தெரிகிறது. தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஒரேவிதமான அபிப்ராயம் கூறினல் வேலை செய்பவர்களுக்கு எளிதாயிருக்கும்.

ஸ்ரீ சிவரஹஸ்யம் மஹாத்ம்ய ஆரம்பம்!!! சென்னை ஸ்ரீ சங்கரமடத்தில் ப்ரதி சனிக்கிழமையும் நடந்த சிவரஹஸ்யமெனும் இதிஹாஸம் இரண்டே அம்சங்களச்சிலிருந்ததால் அது முடிந்து சென்ற சனிக்கிழமை ஷை கிரந்தம் ஆரம்பிக்கப்பட்டது.

சேங்காலிபுரத்தில் ஸ்ரீ ஜகத் குரு விஜயம்

சென்ற 6—12—40 வியாழக்கிழமை காஞ்சி காமகோடி பீடாதிபதி மஹாசன்னிதானம் சேங்காலிபுரம் கிராமத்தில் ஸ்ரீசோளேச்வர ஆலயத்தில் விஜயம் செய்யுங் காலத்தில் சுமார் 2000 ஜனங்கள் காணப்பட்டனர். உள்ளூர் பிரமுகர்களும் ஆஹிதாக்நிகளும் சாஸ்திரக்ஞர்களும் ஷை மதகுருவை வரவேற்றினர்கள். பிறகு பண்டித வர பிரஸங்கபானு வைத்தினாத சாஸ்திரிகள் சம்ஸ்கிருதத்தில் பிரஸங்கம் செய்யுங்காலத்திலும் வடகுடி நாராயண தீக்ஷிதர் தமிழில் பேசுங் காலத்திலும் ஜனங்கள் விசேஷ மகிழ்ச்சியை அடைந்தார்கள். சுமார் 3 மணிக்கு தேவ பூஜை முடிந்தது. எல்லா ஜனங்களும் தீர்த்த ஸேவை செய்தார்கள். பிறகு மாலை 5மணிக்கு, வித்வத் பூஷணம், வைத்தினாத சாஸ்திரிகள் ஷை மஹாசன்னிதானத்தில் அத்வைதத்தின் தத்வம், மஹா பாஷ்யத்திலும் கையடத்திலும், பிரதிபாதனம் செய்யப்பட்டிருப்பதை கிரந்த மூலமாக தெரிவிக்கும் காலத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் விசேஷ ஆனந்தத்தை அடைந்து, தர்க்க சாஸ்திரத்திலும் இஞ்சி வியாபாரம் செய்கிறவன், கப்பல் வியாபாரத்தை சிந்தை செய்வது போல் வேதாந்த சாஸ்திரத்தில் அத்வைத விசாரமே செய்யப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டார்கள்.

மாலை 8 மணிக்கு மஹா சன்னிதானம் பிரஸங்கம் செய்யுங் காலத்தில் இந்த கிராமத்தில் விசேஷமாக ஆஹிதாக்நிகள் நிறைந்திருப்பதும் ஸ்ரீ தியாகராஜ சாஸ்திரிகள் முதலிய பண்டிதர்கள் அநுஷ்டாபகமான சாஸ்திரத்தில் உண்மையை அறிந்து போதிப்பதும், கிரஹஸ்தர்களும் அக்னி உபாஸனம் செய்யத் தகுந்தவர்கள் தான் என்பதும் கோ ஸம்ஸரக்ஷணம் மிகவும் உயர்ந்ததென்றும் இன்னும் பற்பல விஷயங்களை வர்ஷித்தார்கள்.

ஸ்ரீமான் பஞ்சாபகேசய்யர் ஆர்யதர்ம பத்திரிகையை பலப்படுத்த வேண்டுமென்றார்கள்.

பிறகு சாயங்கால பூஜை முடிந்ததும் மஹா சன்னிதானம் கிராமவாஸிகளுக்கு ஸுபலம் கொடுத்தும் அக்கிரகாரத்தில் விஜயம்செய்தார்கள். அனேக பிரபுக்களும், ஸ்ரீ நாராயண வாஜபேயி முதலிய தீக்ஷிதர்களும், பெரியார் ஸ்ரீதியாகராஜ சாஸ்திரிகளும் வைத்தினாத சாஸ்திரிகள் முதலிய பண்டித ச்ரேஷ்டர்களும் பின்தொடர்ந்து பூஜித்தது குறிப்பிடத் தகுந்தது. கடைசியாக தீக்ஷிதர்களும், பண்டிதர்களும் "க்ஷேமாய புனராகமனாய ச" என்றார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் ததாஸ்து என்றார்கள்.

கே. வைத்தினாத சாஸ்திரிகள்.

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும் அசதி களைப்புச்சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சிராப்பள்ளி

ஸ்தாபகர்:-
V. B. நடராஜசாஸ்திரீ,
ஆயுர்வேதாசார்ய (Regd)

தஞ்சைஜில்லா மண் ரஸ்தாக்கள்

(தஞ்சை ஜில்லா போர்டு மாஜி மெம்பர் சேங்காலிபுரம் ஸ்ரீமான். வி. பஞ்சாபகேச ஐயர் எழுதுகிறார்.)

ரஸ்தாக்கள் பராமரிப்பு விஷயமாக லோகல் போர்டுகள் சரிவர கவனம் செலுத்தவில்லை யென்பதை யுணர்ந்து கவர்மெண்டார் சமீபத்தில் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் பணக் குறைவாலில்லாமல்கவனக்குறைவால்சீர்கேடடைந்து வரும் மண் ரஸ்தாக்களின் நிலைமையை அதிகாரிகளும் லோகல் போர்டு வாக்காளர்களும் உணர்ந்து கொள்ளுமாறு தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கும் கிராமாந்திர வாசிகளான பெரும்பான்மையோருக்கும் மண் ரஸ்தாக்கள்தான் அத்தியாவசியமானது.

தற்காலம் தஞ்சை ஜில்லா ரோட்களின் மொத்த விஸ்தீர்ணம் 2554 மைல் 7 பர்லாங்கு. இதில் சுமார் 700 மைல்கப்பி ரோட். கப்பி ரோட்டுகளின் பராமரிப்புக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 540 ஆயிரம் செலவு செய்யப்படுகிறது. அதாவது மைல் ஒன்றுக்கு கிட்டத்தட்ட ரூ 800. மண் ரஸ்தாக்களின் விஸ்தீர்ணம் ஸுமார்1850மைல்இதன் வருஷாந்திரச்செலவு ரூ 264 ஆயிரம். அதாவது மைல் 1க்கு ரூ 141. 1919-20 வருஷம் வரையில் மண் ரஸ்தாக்களுக்கு வருஷம் ஒன்றுக்கு மைல் ஒன்றுக்கு சராசரி ரூபாய் 60 தான் செலவு செய்யப்பட்டு வந்தது. அப்போது ஜில்லா போர்டு பிரசிடெண்டாயிருந்த திவான்பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியாரவர்கள் அந்த வருஷத்திய ஜில்லா போர்டு நிர்வாக யாதாஸ்தில் மண் ரஸ்தாக்களைப்பற்றி அடியிற்கண்டபடி எழுதியிருந்தார்.

,,மண்ரோட்டுகளின் நிலைமை திருப்திகரமாயில்லை என்று பொதுவாய் புகார் இருக்கிறது. இதற்குக் காரணம் டிஸ்டிரிக்ட் போர்டு இஞ்சினீர் மண்ரோட்டுகளை ஏதாவது ஒரு சமயம்தான் பார்க்கிறார் என்பதும், மணல் ரோட்களுக்கு சரியான கணக்குப்படி களி சேர்க்காமல் கீழ் உத்தியோகஸ்தர்கள் தவறுதல் செய்தும், குழிகளையும் அறுத்தோடிகளையும் எப்போதும் கவனிப்பதற்கு பதிலாக வருஷத்திற் கொருதரம் கவனிப்பதேயாகும்,,

அவர் காலத்தில்தான் மண்ரோட்டுகளின் பராமரிப்பு திட்டம் உயர்த்தப்பட்டது. பொதுவாய் அந்த உயர்த்திட்டம் இன்னும் அனுஷ்டானத்திலிருக்கிறதென்றே சொல்லலாம். ஆனால் சில ரோட்டின் திட்டங்களை குறைத்திருக்கிறார்கள் இப்போதுள்ள போர்டார். ஆயினும் மண்ரோட்டுகளின் நிலைமை வரவர கேவலமாகிக் கொண்டே வருகிறது. காரணம் பணம் போதாமையல்ல. அதிகாரிகளின் கவனக் குறைவேயாகும். ஏதாவது செல்வாக்குள்ள ரோடுகள் சரிவர வேலை செய்யப்பட்டு வரலாம். மற்றப்படி மண் ரோட்டுகளின் நிலைமை கேவலமாகிக் கொண்டே வருகிறது. இதற்குக் காரணம் அடியிற் கண்டவைகளேயாகும்.

ரஸ்தாவில் எங்கே என்ன வேலை செய்யவேண்டு மென்று பாராமலேயே பழய எஸ்டிமேட்டுகளைப் பார்த்து வருஷத்திற் கொருதரம் பராமரிப்பு திட்டம் தயாரிக்கப் படுகிறது.

செய்ய வேண்டிய வேலை காலத்தில் செய்யப்படுவதில்லை. மணல் அடித்து முட்டுக் கட்டப்பட்டு போக்கு வரத்துக்கு இடைஞ்சலாய் மாதக்கணக்காய் தங்கியிருந்து கடைசியில் பரத்தப்படாமலேயே மழையிலும் காற்றிலும் வீணாய்ப்போவது சர்வஸாதாரணமாகி விட்டது.

மண் போடவேண்டிய விடங்களில் மணலையும் மணல் போடவேண்டிய விடங்களில் மண்ணையும் போடப்படுகிறது.

வேலை செய்ய வேண்டிய விடங்களில் செய்யப்படாமல் வேண்டாத விடங்களிலும் வேலை செய்யபடுகிறது.

ரஸ்தாக்களுக்கு மண்போட அதன்பக்கத்திலேயே குழிதோண்டி மண் எடுக்கப் படுகிறது. அதிக மழைகாலங்களில் புதிய பெரிய அறுத் தோடிகள் உண்டாவதற்கு இக்குழிகள்தான் காரணம். ஆனால் தப்பித்தவறி வண்டிகள் சாலையை விட்டு மாறுமலிருக்க இக்குழிகள் அபாய அறிவிப்பாகவுமிருக்கின்றன.

கெட்டியாயிருக்கும் சாலை ஓரங்கள் வருஷத்துக்கொரு முறை Sectioning செக்ஷனிங் என்ற பெயரால் கொத்தப்பட்டு அந்த மண் மத்தியில் போடப்படுகிறது. இதனால் மத்தியிலிருக்கும் பள்ளம் படுகுழிகள் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து Inspection பரிசோதனைக்குத் தயாராகிறது. உடனே ஓவர்சியர் வந்துபார்த்து காண்டிராக்டருக்கு பில் தயார் செய்து விடுகிறார். மழைபெய்து விட்டால் நன்றாயிருந்தபாகங்களும் நடப்பதற்குக் கூட லாயக்கில்லாமல் போய்விடுகிறது. மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் பரிசோதனையானவுடனேயே மறைந்திருந்த பள்ளம் படுகுழிகள் ஸ்வரூபத்தைக் காட்டிவிடும். அப்புறம் அவைகளைஒருவருஷத்துக்கு மறைக்கவேண்டிய பொறுப்பு காண்டிராக்டர்களுக்கில்லை கெட்டியாயுள்ள பாகங்களும் இந்தயுக்தாயுக்தத்தை கவனியாமையால் செய்யப்படும் செக்ஷனிங் வேலையால் கெட்டுவிடுகிறது. லோகல் போர்டின் பராமரிப்பில்லாத கிராமங்களிலுள்ள சிலவண்டிப்பாதைகளையும் இந்த செக்ஷன் செய்யப்படும் ரஸ்தாக்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு இந்த வித்தியாசம் நன்கு விளங்கும்.

1924ம் வருஷத்தில் ஜில்லாபோர்டு மெம்பராயிருந்த போது மைல் கூலிகளைக் கொண்டு மண்ரோட்டுகளை ரிபேர் செய்யும் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதை எல்லா மெம்பர்களுக்கும் அனுப்பி ஜில்லா போர்டு ஆலோசனைக்கும் கொண்டு வந்தேன். அதிகாரிகள் விரும்பாத போதிலும் ஜில்லா போர்டு அந்த ஸிஸ்டத்தை ஒப்புக் கொண்டு சிலரோட்டுகள் அந்த முறைப்படி வேலை செய்யப்பட்டது. பழய திட்டச் செலவுக்குட்பட்டே வேலைமுடிந்த துடன் ரோட்டுகளும் நல்ல நிலைமையிலிருந்ததாக முடிவு தெரிவிக்கப்பட்டது. இஞ்சினீர் இலாகா இம்முறையை விரும்பாமலிருக்கும்போதே அவர்கள் இந்த நல்ல முடிவை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. அத்துடன் என் ஜில்லா போர்டு மெம்பர் பதவியும் முடிந்து விட்டது. மைல்கூலி ஸிஸ்டமும் நிறுத்திவிடப்பட்டது.

பிறகு தற்காலம் டிஸ்டிரிக்ட் போர்ட்பிரஸிடெண்டாயிருக்கும் கனவானிடம் இம்முறையைப்பற்றிப்பேசியபோது அவர் சிரத்தை காட்டினார். என்னுடைய ஸ்கீமின் நகலையும் அவருக்கனுப்பினேன். ஆனால் காரியத்தில் ஒன்றும் நடைபெறவில்லை. மேலும் கவனக்குறைவால் சீர்கெட்டிருக்கும் ஒரு குறிப்பிட்டரோட்டின் நிலைமையைக்கண்டு காலத்தில் வேலை செய்யும்படி உத்திரவு செய்யவேணுமாய் பிரதி வருஷமும் அந்தந்த காலத்தில் மனு எழுதிக்கொண்டுவருகிறேன். பழய ஜில்லா போர்டு மெம்பர் என்பதற்காகவாவது என் வேண்டுகோளுக்கு மதிப்புக்கொடுப்பாரென்று தூண்டிய சிலருக்காக என் பெயரைக் கண்டு தனியாகவும் எழுதினேன். பல ஜனங்கள் கையெழுத்துப் போட்டு மனுக்களும் அனுப்பப்பட்டன. காரியத்தில் ஒரு இம்மி கூட நகரவில்லை. மனு வந்து சேர்ந்தது என்று ஒரு பதில்கூட கிடையாது. கவர்ன்மெண்ட் இலாகாகளில் கூட "வந்து சேர்ந்தது கவனிக்கப்படும்" என்று பதில் அனுப்பும் வழக்கம் உண்டு. ஜில்லா போர்டு பிரதிநிதி ஸ்தாபனமாதலால் வழக்கமில்லை போலும்!

இதற்கெல்லாம் காரணம் ஜில்லா போர்டில் பதவிக்கு வருபவர்களின் பிசகல்ல. வாக்காளர்களின் சிறத்தைக் குறைவுதான் காரணமென்பது என் அபிப்பிராயம். லோகல்போர்டு சம்மந்தப்பட்டமட்டில் சுய ஆட்சி கொடுத்து விட்டபடியால் மேலே புகார் செய்துகொள்ள இடமில்லை. கவர்மெண்டாரும் மண் ரஸ்தாக்களைப்பற்றி பற்றி காதிலேயே போட்டுக்கொள்ள மாட்டார்கள். கப்பிரோட்டுக்களைப் பற்றித்தான் அவர்களுக்கு சிரத்தை. வாக்காளர்கள் மட்டும் வோட் கொடுக்கும்போது தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்வார்களேயானால் பதவி வகிப்பவர்களும்தங்கள் கடமையை உணர்ந்து நடந்து கொள்வார்கள்.

மண்ரோட்டுகளின் பராமரிப்புக்கு காண்டிராக்டர்களிடம் பிரயோஜனமில்லை. மைல் கூலி ஸிஸ்டம் தான் நல்லது. மண் ரோட்டுகளுக்கென்று தனியாக மேஸ்திரிகளையும் ஓவர்சியர்களையும் நியமித்து காலந்தவறாமல் வேலைகளைச் செய்து வந்தால்தான் மண் ரஸ்தாக்கள் நல்ல நிலைமையிலிருக்கும். வேலை செய்ததை அளந்து பணம் கொடுக்கும் முறையை விட்டு ரோட் கெடுதலாயிருந்தால் அவர்களை சிட்சிக்கும் முறை அனுஷ்டிக்கப்படவேண்டும்.

திப்பிராஜபுரம்

ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸபா:— 16-11-40உ ப்ரும்மஸ்ரீ லக்ஷ்மீகாந்த சர்மா அவர்களால் ஸ்ரீமத் பாகவதத்தை ப்ரும்மதேவர் நாரதருக்கு சங்கரமமாக சொன்னதை ஆரம்பித்து தத்தாத்ரேய அவதாரம் வரையில் சொன்னார்கள்.

23-11-40உ சனிக்கிழமை தினம் ஷை யார் ஸ்ரீபாகவத சங்கரஹத்தை மேற்கொண்டு ஆரம்பித்து கடைசிவரையில் சொல்லி முடித்தார்கள்.

25-11-40உ திங்கட்கிழமை ஏகாதசி தினம் முத்திராதிகாரி டி. எஸ். வெங்கிட்டராமய்யரால், சதாசிவ ப்ரும்மேந்திரரின் சரித்திரமும், சூடாலையின் ஆக்யானமும் வாசித்துச் சொல்லப்பட்டது.

30-11-40உ சனிக்கிழமைதினம் வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் ஆலயங்களும் நமது கடமையும் என்பதைப்பற்றி அரியதோர் உபன்யாசம் செய்தார்கள்.

ஸ்ரீஜகத்குரு விஜயம்.

5-12-40உ வியாழக்கிழமைதினம் இவ்வூர் ஸ்ரீ அபிராமாம்பிகா ஸமேத ஸ்ரீ விக்ரம சோளேச்வர ஸ்வாமி சிவாலயத்திற்கு திருப்பணி வேலை ஒழுங்கே செய்யப்பட்டு அஷ்டபந்தனம் சுத்தி ஸ்ரீமஹா கும்பாபிஷேகம் விமரிசையாக நடந்தேறியது. அவ்வமயம், கிராமத்தவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி, நமது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்காராசாரிய ஸ்வாமிகளவர்களும் விஜயம் செய்து ஷை வைபவத்திற்கலந்து கொண்டு காஷி அளித்து அனுக்ரஹித்தது குறிப்பிடத்தக்கது.

(க-கி)

3- JAN 1941 MADRAS

வான்மீகரும் தமிழும்.

(மதுரை பண்டிட் நாராயணய்யங்கார்)

மதுரையில் வெளிவரும் செந்தமிழ் பத்திரிகையில் ஷை தலையங்கத்துடன் சென்ற பகுதான்ய வருஷம் மார்கழி மாதம் முதல் துடர்ச்சியாக பல வியாஸங்கள் வெளிவந்துள்ளன. அவ்வியாசங்களில் புலப்படும் ஆராய்ச்சிகளும் குறிப்புகளும் முடிவுகளும் சற்றும் பொருத்தமற்றவை யென நிரூபிக்கவே இதை எழுதுகின்றோம். வால்மீகிமுனி வேறு பாஷைகளிலுள்ள காவிய நடைகளைக் கற்று தான் ஸம்ஸ்கிருத ராமாயணத்தை எழுதியிருக்கின்றாரென்பதும் தமிழ் காவியங்களைப் படித்துத்தான் எழுதினாரென்பதும் ஒவ்வாது. ஷேக்ஸ்பியர் போன்ற ஆங்கிலகவிகள் முதலானோர் தங்கள் நாடகங்களை எழுதும் போது மற்ற பாஷைகளைக் கற்று அப்பாஷையிலுள்ள நாடகங்களைக் கற்றுத் தான் எழுதினார்களென ஒப்பமுடியாது. அவ்விதமாகிய ஆதி தமிழ் கவிகளும் மற்ற பாஷைகளிலுள்ள காவிய நடைகளையறிந்து தான் தங்கள் காவியங்களையும் எழுதிமுடித்ததாக ஒப்ப நேரிடும். வான்மீகியார் அல்லது வான்மீகையார் என்பவர் பாடியதாக புறநானூறு என்ற தொகுதியில் காணப்படும் பாட்டும் இவர் ராமயண வால்மீகி என்று நிரூபிக்கக்கூடியதாக வில்லை. வடநாட்டிலிருந்த வால்மீகி செய்த, தமிழ்பாட்டு வடநாட்டில் அழிந்து போய் தென்நாட்டில் மாத்திரம் காணப்படுகிற தென்பது சற்றும் பொருத்த மற்றவாதமாகும். தமிழ் சித்தர்களில் ஒருவராகிய வான்மீகி என்பவர் பாடிய செய்யுள் என்று கொள்ளுவது மிகவும் உசிதம். தமிழ் சித்தர் பதினெண்மரில் வால்மீகி என்பவர் ஒருவர் என்பது தமிழ் நாடு அறிந்த விஷயம். தபஸ்ஸின் பெருமையைப் பற்றி இருவரும் ஒரே விதமாகப் பேசுவதால் இருவரும் ஒருவர் ஆகார். தபஸ்ஸைப்பற்றி பெருமைபேசாத கவி உலகில் அதிலும் விசேஷித்து இப்பரதகண்டத்தில் யாரும் இருந்திருக்க முடியாது. ஜைனர், பௌத்தர், முதலியோர் நூல்களிலும் தவப்பெருமை காணப்படுகின்றது. இது பரதகண்டத்தாரின் இயல்பாகும். வால்மீகிமுனி வடநாட்டில் தமஸா என்ற நதியின்சமீபத்தில் தவம் செய்து வசித்து வந்ததும் பிறகு அவிடத்திலேயே ராமாயணம் தொகுத்ததும் லக்ஷ்மணனால் காட்டில் விடப்பட்ட பூர்ணகர்ப்பிணியான சீதாதேவி பிறகுவால்மீகி முனிவரின் ஆச்ரமம்அடைந்து குழந்தைகளைப்பெற்றதும் அக்குழந்தைகளுக்கு ராமாயணத்தை உபதேசித்ததும் பிறகு அசுவமேத ஸமயத்தில் ஸ்ரீராமன் முதலியோர் முன்னிலையில் அக்குழந்தைகள் ராமாயணத்தைப் பாடியதும் ஆகிய இவைகளை நன்கு கவனித்தால் வால்மீகி முனி தமிழ் நாட்டில் சம்பந்தம் பெற்றவராகக்கருத முடியாது. முனிவர் முக்காலத்தையும் உணர்ந்தவர் ஆனதால் தமிழ்பாஷையையும் தத்காலம் உலாவும் ஆங்கிலம் முதலியவையும் வால்மீகியும் அறியக்கூடும் என்பதை எல்லோருமே ஒப்பவேண்டும்.

வால்மீகி தமிழ் கவி நடைகளில் பயிற்சி பெற்றே ராமாயணத்தை எழுதினார் என்பதுதான் ஆதாரமற்ற வாதமாகும். ராமாயணத்தில் சுந்தரகாண்டமென ஓர் பகுதிக்குப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மற்ற காண்டங்களுக்கு இடப்பட்டபெயர் பொருத்தமாகக் காணப்படுகின்றது. 'காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயா: சரிதம் மஹத்' என்று முதலில் கூறப்பட்ட விதமாக வால்மீகி காவ்யம் ராம சரிதமாகவும் முற்றிலும் அமைந்துள்ளது. தம்பதிகளில் புருஷப்ராதான்யத்தையிட்டு ராமாயணம் என்ற பெயர் உலகவழக்கில் வழங்கி வருகின்றது. பாலையாயும் பாலனாகியும் உள்ள ஸீதாராமர்களைச் சொல்லும் காண்டம் பாலகாண்டமெனவும் அயோத்தி, நகரில் இவ்விருவர்களுடைய விஷயங்களைச் சொல்லும் பகுதி அயோத்தியா காண்டமென்றும், ஆரண்யத்தில் இவ்விருவர்களுடைய செயல்களைச் சொல்லும் பகுதி ஆரண்யகாண்டமெனவும், ஆரண்ய நடவடிக்கைகளையொட்டியே கிஷ்கிந்தையில் நடைபெற்ற விஷயங்களைக் குறிக்கும் பகுதி கிஷ்கிந்தா காண்டமெனவும், யுத்தத்தில் இருவர்களுடைய செயல்களைக் குறிக்கும் பகுதி யுத்தகாண்டமெனவும் பெயர் இருப்பது போல, சுந்தரகாண்டம் என்ற பகுதிக்கும் பெயர் வந்ததற்குக் காரணம் சொல்ல வேண்டும். சுக்ரீவ பட்டாபிஷேகத்தையொட்டி கிஷ்கிந்தாகாண்டமெனப் பெயர் வந்ததாகக் கூறமுடியாது. விபீஷணனுக்கு லங்கா பட்டாபிஷேகம் ஆனதையொட்டி யுத்தகாண்டத்திற்கும் லங்கா காண்டம் எனப் பெயரிட வேண்டியதாகும்.

தவிர ஒவ்வொரு காண்டமும் ஸீதாராமர்களைச் சொல்லுவதாக ஆனால் தான் க்ருத்ஸ்நம் ராம சரிதம் ஸீதா சரிதம் என்ற வசனம்பொருந்தும்மற்ற காண்டங்களைப்போலவே சுந்தர காண்டமும் ஸீதாராம சரிதங்களைச் சொல்லுவதாகவே கொள்ள வேண்டும். உண்மையில் சுந்தர காண்டம் முழுவதும் ஆஞ்சனேயருடைய வீரச்செயல்களையே கூறுவதால் ஆஞ்சநேய காண்டமெனப் பெயரிடுவது பொருத்தமாகும். ஆகிலும் வால்மீகி இக்காண்டமும் ஸீதாராம சரிதங்களைப் பற்றியதே என்று காட்ட ஸுந்தரகாண்டமெனப் பெயரிட்டார். சோகம் நீங்கி சுந்தரர்களான ஸீதாராமர்களை சொல்லும் காண்டம் என்பது பொருள். இக்காண்டத்தில் நடிகர்களாகவரும் அனைவருமேசோகம் நீங்கி ஸுந்தரர்கள் ஆகின்றார்கள். ஹனுமானுடைய சோகம், ஜாம்பவான் முதலியவர்களுடைய சோகம், ராம சுக்ரீவ சோகம் ஸீதையின் சோகம் முதலியவை வர்ணிக்கப்பட்டு உடனே அதன் நிவர்த்தியும் ஆனந்தமும் கூறப்படுகின்றது. ஆகவே இக்கண்டத்தின் பெயர் முற்றிலும் பொருத்த முள்ளதாகின்றது. தவிர இக்காண்டத்தில் சீதையின் கற்பழகும் ராமனுடைய ஏகதாரவ்ரத அழகும் வர்ணிக்கப் பட்டிருக்கின்றது. சீதைவிடம் ஆஞ்சனேயர் வர்ணித்துள்ள ராம ஸௌந்தர்யத்தை முன்னிட்டு இப்பகுதிக்கு சுந்தரகாண்டம் எனப் பெயர் வந்ததாகச் சொன்ன போதிலும் அதில் குற்றமில்லை. சுந்தரனான ராமனைச் சொல்லும் காண்டம் எனச்சுலபமாகப் பெயர் பொருந்துகின்றது. ஆனால் இவ்வர்த்தம் கொள்ளும் போது முன் காண்டங்களில் சீதா விஷயமும் சேருவது போல் இப்பகுதியில் சேராமல் போகும். சோக்கு என்பதுதமிழ்வழக்காகிலும் ஸம்ஸ்கிருதத்திலும் அபிக்யான சாகுந்தலம்போன்ற பல உதாஹரணங்கள் இருப்பதால் ஸம்ஸ்கிருத வழக்குமாகும். ஸம்ஸ்கிருதம் தமிழிலிருந்து தான் இவ்வழக்கும்பெற்றதென்பது ஆதாரமற்றதாகும். ராமன் ஸௌந்தர்யத்தை சொல்லுவதால் ஸௌந்தர்ய காண்டமென இப்பகுதிக்குப் பெயரிட வேண்டுமென்றபிரச்சனையே எழஹேதுவில்லை. சுந்தரர்களான ஸீதா ராமர்களைப் பற்றிய காண்டம் சுந்தரகாண்டமாக தடையில்லை, ஸுந்தரம், கவிபோன்ற ஸம்ஸ்கிருத பதங்கள் தர்மிவாசகமென்பது ஸம்ஸ்கிருதவியாகரண ஸித்தம், தமிழில் இச்சொற்கள் தர்மிவாசகமாகவும் தர்மவசமாகவும் உபயோகிக்கப்படுகின்றன. இதுசுத்தமாயல்லது அசுத்தமா என்றவிஷயத்தில் தமிழ் இலக்கணம் மௌனம் சாதிக்கிறது. ஸம்ஸ்கிருத பதங்களுக்கு ப்ரகிருதி ப்ரத்யயார்த்தங்கள் வியாகரண சிக்ஷிதங்களானதால் அதற்கு விருத்தமாக ஸம்ஸ்கிருத பதங்களை கவிகள் உபயோகிக்க முடியாது. ராமாயணத்திலோ அல்லது வேறு நூல்களிலோ எந்த இடத்திலாவது ஸுந்தரம், கவி, போன்ற பதங்களுக்கு தர்மபரமாக அர்த்தம் கொள்ளும்படி ஒரு உதாரணம் கூட காட்டமுடியாது. தமிழிலும் அழகன், புலவர், போன்ற பதங்களில் எதற்காவது தர்மபரமாக அர்த்தம் கொள்ளுவதில்லை. அழகன் என்பதற்கு அழகு என்றும் புலவர் என்பதற்கு புலமை என்றும் அர்த்தம் கொள்ளுவதாயின் தர்மி பதங்களுக்கு தர்மபரமாக அர்த்தம் கொள்ளுவது தமிழ் வழக்கு எனலாம். ஸம்ஸ்கிருத பதங்களை மாத்திரம் தர்மபரமாக உபயோகிப்பது வழக்கமென்றால் அதுகுற்றமற்ற வழக்காகாது. அது தமிழர்களின் யதேச்சையையே குறிக்கும்.

(தொடரும்.)

விவஸாயிக்கடன் நிவாரணச்சட்டம் சொல்லுபடியானதே

ஸமஷ்டித் தீர்ப்பு

சென்னை கடன் நிவாரணச்சட்டம் செல்லுபடியுள்ள தல்லவென்று சிலர் பெடரல் கோர்ட்டுக்குச் செய்துகொண்ட அப்பீலை பெடரல் கோர்ட் ஜட்ஜிகள் விசாரணை செய்து ஷை சட்டம் செல்லும்படியானது தானென்று மெஜாரிடியில் தீர்மானித்து அப்பீலைத்தள்ளிவிட்டார்கள். ஓர் ஜட்ஜ்மட்டும் அப்பீலை ஏற்பதாகக் கூறினர்.

ஸத்யாக்ரஹம்

சட்டஸபைத்தலைவர் கனம் புலசு சாம்பமூர்த்தி, ஸுப்பராயன், ஷையார் மனைவி, ஸ்ரீமான் வெங்கடஸாமி நாயுடு, முனுஸாமி பிள்ளை, கே. சந்தானம் முதலிய பலர் ஸத்யாக்ரஹம் செய்து தண்டிக்கப்பட்டனர். மற்ற மாகாணங்களிலும் அனேகர் சிறை சென்றவுண்ணமயிருக்கிறார்கள்.

திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜில்

ஜாதிகலப்புச் சாப்பாடு ஜில்லா போர்ட் உத்திரவு

தஞ்சை ஜில்லா போர்ட்டின் நிர்வாஹத்திற்குள்பட்ட திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜிலும், மற்ற பள்ளிக்கூடங்களிலும் சாப்பிட்டு வருகிறவர்கள் விஷயமாக இனிஜாதி வித்தியாஸம் பாராட்டப்படக் கூடாதென்றும், எல்லாஜாதியாருக்கும் ஒரே இடத்திலும் சமையிலும், எல்லோரும் சேர்ந்தே சாப்பிட வேண்டியதும் அவச்யமென்று போர்ட் உத்திரவு செய்திருக்கிறது.

ஸாஹித்ய சிரோமணி கிளாஸையும், இரண்டு ஸம்ஸ்கிருத உபாத்தியாயர்களையும் எடுத்து விடுவதாக தீர்மானிக்கப்பட்டது.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஸ்ரீ கார்த்திகை-மீ 27உ

இந்தியாவைத் துண்டாக்கும் குரூர யோஜனை

பாகிஸ்தான் என்ற பெயருடன் பத்திரிகைகளில் பிராபல்ய மடைந்து நிற்கும் இந்தியப் பிரிவினை திட்டமானது தேசமெங்கும் மிகுந்த கிளர்ச்சியை கொடுத்திருக்கிறது. இந்த துராலோசனையை வெளியிட்ட ஜனாப் ஜின்னா நாளுக்கு நாள் தமது விபரீத எண்ணத்தை பெருப்படுத்தி பயமுறுத்தும் தோரணையில் பேசத்துடங்கி விட்டார். சில தினங்களுக்கு முன் அவர் இதைப் பற்றிச் சொல்லியிருப்பது அவருடைய முடிவான பேச்சாக நினைக்கும்படி இருக்கிறது.

இந்தியாவில் ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமைக்கோ, ஸ்வராஜ்யத்திற்கோ, வேறு எந்த வழியையும் தம் கக்ஷியார் அங்கீகரிக்கப் போவதில்லை யென்றும், பாகிஸ்தான் திட்டம் ஒன்று தான் அதற்கு ஏற்ற ஸாதனமென்றும், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்று சேர்ந்து வாழ்வதென்பது ஒரு நாளும் முடியாத கார்யமென்றும், மஹம்மதியர்கள் தனியாகவே வாழமுடிவு செய்துவிட்டதாயும் திட்டமாகக் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தான் யோஜனையானது, அனுபவ ஸாத்யமற்ற பைத்தியக் காரயோஜனையென்றும், அது வெறும் கனவுமாத்திரமென்றும் ஒரு நாளும் நடைபெறப் போவதில்லை யென்றும், நகைப்பிற்கிடமான இந்த வீண்கூச்சலைக் கண்டு இந்தியர்கள் கலவரமடைய வேண்டியதில்லை யென்றும் நினைத்து அலக்ஷ்யமாயிருப்பவர்கள் வெகு பேர்கள் இருக்கிறார்களென்பதை நாமறிவோம். ஆயினும் இந்த பாகிஸ்தான் கூச்சலின் அர்த்தமற்ற தன்மையை உணரமுடியாத முஸ்லீம் பாமர ஜனங்களுக்கு மனவெழுச்சியேற்பட்டு பெரும் தொல்லைகள் இதனால் விளையக்கூடியதாயிருப்பதை விவேகிகள் அலக்ஷ்யம் செய்ய முடியாது. ஆதலால் இதை விவேகிகளான முஸ்லீம்களும் மற்றவர்களும் கவர்ன்மெண்டாரும் ஆரம்பத்திலேயே அடக்கிவிட வேண்டியது அவச்யமாகும். இல்லையேல் இந்தியாவின் அமைதிகெட்டுவிடும்.

ஈச்வரஸிருஷ்டி காலம் முதலாக புண்ய பூமியாகிய இந்த பாரத தேசமானது ஹிந்து ஸமூஹத்தினருக்கே ஸொந்தமானதாக ஹிந்துக்களால் கருதப்படுகிறது. இத்தேசத்தின் பிராசீன புராணாதி சரித்திரங்களும் நவீனகால சரித்ரங்களும், தேசத்தின் ஸகலவிதமான அமைப்புகளும் இந்த விஷயத்தை உறுதிசெய்கின்றனவென்பதை ஜனாப் ஜின்னா கோஷ்டியாரே மறுக்க முடியாது. “ஹிந்துஸ்தானம் ஹிந்துக்களுடையதே” என்று ஹிந்துக்கள் ஸகலவித உரிமைகளுடன் கொண்டாடுவதை ஒருவரும் தடுக்க முடியாது. ஜனாப் ஜின்னாகூட வடமேற்கு எல்லையிலும், வடகிழக்கு எல்லையிலுமே ஒரு தனியான மூஸ்லீம் ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொடுக்கும்படி கேட்பதிலிருந்து இந்தியாவுக்குள் அவர்பிரதேசம் ஒதுக்கித்தரவேணுமென்று பாத்தியம் கொண்டாடத் துணியவில்லையென்று ஏற்படுகிறது.

ஒரு வகுப்பாருக்குச் சொந்தமான தேசத்தில் வந்தேறிகளான ஜாதியார் ஆதிக்யம் வஹித்து தேசத்தை ஆக்ரமித்துக் கொள்ளும் அநீதிக்கு எந்த தேசமும் உட்பட்டதில்லை யென்பது சரித்ரபிரஸித்தமான நிர்ணயம். தம் தேசத்தைப்பிறர்வசத்தில் விடுவதற்கு இணங்காததாலேயே உலகத்தில் அங்காங்கு ஸ்வதேச ரக்ஷணத்திற்காக பற்பல யுத்தங்கள் அவ்வப்போது தோன்றுகின்றன. பல்லாயிரக்கணக்கான உயிர், பொருள்கள் தியாகம் செய்யப்படுகின்றன.

இவ்விஷயத்தில் ஜனாப்ஜின்னாவின் ஜாதியார் எவ்வளவு பெருந்தன்மையுடன் நடந்திருக்கிறார்களென்பதை உலகம் அறியாதா? மஹம்மதிய தேசங்களில் குடியேறியுள்ள அன்னிய ஜாதியினருக்கு அவர்கள் அளிக்கும் உரிமைகள் என்ன? எவ்வளவு இடங்களில் அந்நியருக்கு மஹம்மதியர்கள் தங்கள் நாட்டைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்களோ தெரியவில்லை!

ஹிட்லரால் அடித்து விரட்டப்பட்ட யூத ஜாதியினர் தங்கியிருக்க உலகத்தில் ஒரு தேசமாவது இடமளிக்க முன்வரவில்லை. பாலஸ்தீனத்தில் ஒரு பிரதேசத்தை யூதருக்குப் பிரித்துக் கொடுத்து அங்கு அவர்களைக்குடியேற்றி வைக்கச் செய்த முயற்சியை மஹம்மதியர்கள் கவிழ்த்து விடவில்லையா? அன்னியருக்கு இடமளிக்கமறுத்த பாலஸ்தீனத்தில் கிளர்ச்சியை உலகம் மறந்துவிட்டதா? பாலஸ்தீனப்பிரிவினை அந்யாயமென்று கருதிய ஜின்னா கோஷ்டியார், இந்தியப்பிரிவினை மட்டும் நியாயமென்று வாதிக்கவும் பயமுறுத்தவும் முன் வந்திருப்பது விநோதமல்லவா?

ஹிந்துக்களுடைய மனோபாவம் மிக ஸாத்விகமானது. தம் தேசத்தில் அவர்கள் யாரையும் பெருந்தன்மையுடன் வரவேற்றுக்குடியேற வஸதியளிக்கும் குணமுள்ளவர்கள். ஆதலால் தான் இத்தேசத்தில், வேறு எங்கும் காணப் படாத அளவுக்கு அன்னிய ஜாதியினர், வியாபாரம் உத்யோகம், மதம், முதலிய பற்பல காரணங்களை முன்னிட்டுக் கணக்கில்லாமல் கூடியிருக்கிறார்கள். உலகத்தாருக்கு இந்தியா ஒரு திறந்த வீடாக ஆகிவிட்டது. ஹிந்துக்கள் இவ்வளவு பெருந்தன்மை காட்டியிருந்தும் வந்தேறிகள் ஹிந்துக்களையே விரட்ட முற்படுவதும், பொய்க் கதைகளைச் சொல்லி தங்கள் பொய் பாத்யங்களை வற்புறுத்துவதும் ஸஹிக்கக் கூடியதாயில்லை.

“நற்குணமற்றவர்களிடம் பெரியோர்கள் ஸாத்விகத் தன்மையை காட்டினால், சக்தியற்றவர்களாக நினைக்கப் படுகிறார்கள்” என்று நியாயமுண்டு. அதன்படி ஹிந்துக்கள் ஸாத்விகர்கள். உதாரத் தன்மையுள்ளவர்கள். ஆயினும் இதனால் அவர்கள் சக்தியற்றவர்களாயும் விரட்டப்படக்கூடியவர்களாயும் உலகத்தாரால் நினைக்கப்பட்டுவிட்டார்கள். இப்போதிய பயமுறுத்தலுக்கு இதுவே முக்ய காரணம்.

முஸ்லீம்லீக்கின் விரட்டல்களுக்கெல்லாம் காங்கிரஸின் பயங்கொள்ளிக்கொள்கையே காரணமென்று தேசமெங்கும் பிரபலஸ்தர்களிடம் அபிப்பிராயமிருந்துவருகிறது. காங்கிரஸானது முஸ்லீம்களுக்குக் கொடுத்த சலுகை காரணமாகவே இப்போது பெரிய பூதமாகிய பாகிஸ்தான் தோன்றியிருக்கிறது. காங்கிரஸ் தனது தவறை திருத்திக்கொள்ளவேண்டிய ஸமயம் வந்துவிட்டது.

கவர்ன்மெண்டாரும் தேசத்தின் அமைதியைக் கெடுத்துவரும் இத்தகைய கிளர்ச்சிக்கு இடம்வைத்துப் பேசாமல் ஆரம்பத்திலேயே இதைக்கிள்ளி எறிந்துவிடவேண்டியது அவச்யமாகும். அவர்களுடைய மனோபாவத்தை வெளியிட்டு ஹிந்துக்களுக்கு நம்பிக்கை யேற்படும்படி செய்ய வேண்டும்.

இந்தியாவில் மஹா விவேகிகளான முஸ்லீம்கள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். ஜின்னாவை இவர்கள் தலைவராகக்கொள்ளவில்லையென்பது பிரஸித்தம். பாகிஸ்தான் கூச்சலைக் கண்டிப்பவர்கள் கணக்கில்லாமல் இருக்கிறார்கள். அத்தகைய முஸ்லீம் கனவான்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து இந்த பாகிஸ்தானை துரத்தியடித்து சாச்வதமான ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்த உடனே முயற்சிக்கவேணுமென்று கோருகிறோம்.

ஆஸ்திக ஹிந்து மாதர்கள் மகாநாடு

திருவண்ணாமலை.

(10—12—'40) செவ்வாய்க் கிழமை மாலை 3-30 மணிக்கு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த “சக்தி விலாஸ்” மண்டபத்தில் மேற்படி மகாநாடு நடைபெற்றது.

மதராஸ் ஸ்ரீமதி பத்மாவதி அம்மாள் (எ) பட்டம்மாள் தலைமையில் நடைபெற்றது.

மன்னார்குடிமங்களம் ஸ்ரீமதி செல்லம்மாள் மஹாநாட்டை ஆரம்பித்துவைத்து பிரஸங்கம் செய்தார்.

ஸ்ரீமதி ஏ. மீனாக்ஷி அம்மாள் கொடியேற்றினார்.

காங்கிரஸ்—லீக் ஸமரஸம்?

முஸ்லீம் லீக்குக்கும் காங்கிரஸுக்கும் உடனே ஸமரஸம் ஏற்படுத்தச் சில பிரமுகர்கள் பாடுபட முன் வந்திருக்கிறார்கள். வங்க பிரதம மந்திரி மேற்படி விஷயமாக சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பதுடன் இதைப்பற்றி யோஜிக்க முஸ்லீம்லீக் நிர்வாஹ ஸபையை சீக்கிரத்தில் கூட்டவேணுமென்றும் கோரியிருக்கிறார்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மாகாண மஹாநாடு.

திருவண்ணாமலையில் பிரபலமாக நடந்தது.

(நமது விசேஷ நிருபர்)

டிசம்பர்-மீ 10உ

1940ஹு டிஸம்பர்மீ 9உ மாலை 2மணிக்கு அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் மாகாண வருஷாந்திரக்கூட்டம் ஸ்ரீ திருவண்ணாமலை கோவில் சத்தி மண்டபத்தில் கூடியது. அன்று காலையிலும் அதற்குமுன்னதாகவும் அவ்வூருக்கு வந்து சேர்ந்த பிரஸிடெண்டு, வொர்கிங் பிரஸிடெண்டு இதர தலைவர்கள், கான்பிரென்ஸுக்கு வந்த டிலிகேட்டுகள் எல்லாரையும் ஸ்டேஷனில் எதிர்கொண்டு அழைத்து அவர் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஜாகைகளில் கொண்டு போய் விடப்பட்டார்கள்.

மாலை ஒரு மணி சுமாருக்கு பிரஸிடெண்டு தங்குமிடத்திலிருந்து அவர்களையும் ராவ்சாகேப் N. நடேசய்யர் அவர்களையும் தலைவர்களையும் பெரிய ஊர்வலமாக யானை ஒட்டகை மேளம் பாண்டு முதலியதுகளுடன் ஸ்ரீ சங்கர ஆதி பகவத்பாதாளுடைய உருவப் படத்தை முன்னிட்டுக் கொண்டு உபனிஷத் படனம் செய்துகொண்டு மண்டபத்திற்கு 2 மணிக்கு வந்து சேர்ந்தார்கள்.

பிரஸிடெண்டு ஷேட் புருஷோத்தமதாஸ் கோகுல்தாஸ் கார்யக்கமிட்டித்தலைவர் ராவ் சாகேப் N. நடேசய்யர், தண்டலம் T. S. ராமஸ்வாமிஅய்யர் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் திவான்பகதூர் V. மாசிலாமணி பிள்ளை ஸ்ரீமான்கள் குன்னம் சுப்ரமண்ய அய்யர் சீர்காழிK. ராமநாத முதலியார், வெட்டவர்தம் ஜமீன்தார் கோட்டையூர் சுவர்ணநாதம் செட்டியார், அழகப்ப செட்டியார் தேவகோட்டை தி. அ. சு. அ. சுப்ரமணியம்செட்டியார், தி. அ. சு. சோ. ம. அண்ணாமலை செட்டியார், அள. சும. பாலசுப்ரமணியன் செட்டியார், காரைக்குடி சே. வு. மெ மெய்யப்ப செட்டியார், கு. ம. ரா. நாராயணம் செட்டியார், நேமச்சம்பட்டி தி. அரு. அ. அண்ணாமலை செட்டியார், ஆத்தங்குடி சு. வீ. ர. கதிரேசன் செட்டியார், மதுரை வக்கீல் அகில இந்திய வர்ணாச்ரம டவுன் சங்கத்தலைவர் N. R. கிருஷ்ணசாமி அய்யங்கார், திருவையார் சாஸ்திர ரத்னாகரம் விசுவநாத சாஸ்திரிகள், தேவகோட்டை கிருஷ்ணசாஸ்திரிகள், மாஜி அஸிஸ்டெண்ட் இஞ்சினீயர் C. S. ஸ்வாமிநாத சாஸ்திரிகள், கோயம்புத்தூர் சங்கர நாராயணய்யர், கும்பகோணம் வக்கீல் M. K. வைத்யநாதய்யர் சோழவந்தான் ராமகிருஷ்ணய்யர், யூ. வெங்கடசுப்பய்யர், யூ. நாராயணசாமி அய்யர், ஜீ. வி. வெங்கட்ராமய்யர், வாசுதேவாச்சாரியார், வி. கே. ஸீதாராமய்யர், T. A. ராமநாதய்யர், சுந்தரகணபதி அய்யர், ராவ்சாகேப் சேஷாத்திரி அய்யர், எஸ். வெங்கடாசாரியர், காரைக்குடி சுந்தரராம வாத்தியார், வேலாயுத முதலியார், கரிக்கலவாக்கம், அட்வகேட்கள், நாராயணஸாமி அய்யர், ஸ்ரீனிவாஸய்யர், தேவராஜ ராவ், சங்கர ஸுப்பிரமண்ய அய்யர், மஹா மஹோபாத்யாய ஆர். வி. கிருஷ்ணமாசாரியர், கும்பகோணம் எஸ். மஹாலிங்கய்யர், அக்னிஹோத்ரம்ராமாநுஜதாதாசாரியார் கல்யாணஸுந்தர சாஸ்திரிகள் முதலானவர்களும், மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பல ஸ்திரீகளும் இன்னம் பலர்களும் கூடியிருந்தார்கள்.

வரவேற்பு கமிட்டியார் சார்பாக நல்வரவேற்புப் பத்திரங்கள் கொடியேற்று விழாத் தலைவர் கரு.கி. சுவர்ணநாதம் செட்டியாருக்கும், திறப்பாளர் திவான்பகதூர் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் V. மாசிலாமணி பிள்ளைக்கும் கார்யக்கமிட்டித் தலைவர் ராவ்ஸாஹேப் N. நடேசய்யருக்கும் கான்பரென்ஸ் அக்ராஸநாதிபதி ஸேத் புருஷோத்தம தாஸ் கோகுல்தாஸுக்கும் வாசித்துக்கொடுக்கப்பட்டன. அவர்களுடைய பிரத்யுத்தரங்களும் கோகுல்தாஸ் அவர்களுடைய அத்யக்ஷர் முகவுரையும் பிறகு வரும்.

மஹாநாட்டுக்கு வரவேற்பு கழகத் தலைவர் கோட்டையூர் க. வீ. சோ. வீ. அழகப்ப செட்டியாரின் வரவேற்பு வாசிக்கப்பட்டது. ஸேத் கோகுல்தாஸ் அவர்களை கான்பிரென்ஸுக்கு பிரஸிடெண்டாக திருவண்ணாமலை ஸ்ரீ T. A. ராமநாதய்யரால் பிரேரேபிக்கப்பட்டு ராவ்சாஹேப் சேஷாத்திரி அய்யரால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீதண்டலம் T. S. ராமஸ்வாமிய்யர், மெய்யப்ப செட்டியார், வேலாயுத முதலியார், M. K. வைத்தியநாதய்யர், வாசுதேவ சாஸ்திரிகள் N. R. கிருஷ்ணசாமிய்யங்கார், சங்கர நாராயணய்யர் இன்னம் பலர்களால் அவரவர்கள் ஜில்லாக்கள் சார்பாக ஆதரிக்கப்பட்டு நிறைவேறியபின் கரகோஷங்கள் மத்தியில் ஸேத் கோகுல்தாஸ் தலைவராஸனத்தில் அமர்ந்தார். கான்பரன்ஸ் நடந்த ஹால் விஸ்தாரமானதாலும் வெளியில் கோவில் ரத உத்ஸவத்திற்கு வந்திருந்த ஏராளமான ஜனங்கள் மண்டபத்தில் நடைபெறும் உபன்யாசங்களும் கேட்கும் பொருட்டும் ஒலி பரப்பும் கருவியும் அமைக்கப்பட்டு இருக்கிறது.

ஸ்ரீ சொர்ணநாதம் செட்டியார் ஹநுமத்த்வஜம் ஏற்றி வைத்து மிக உருக்கமாகப் பேசினார். ஸ்ரீ நடேசய்யர் ஆரம்பபிரஸங்கம் செய்தார்.

10உ காலை 8-மணிக்கு மறுபடியும் மகாநாடு ஆரம்பித்தது. முதல் நாள் போல் ஒலி பரப்பும் கருவி அமைக்கப் பட்டிருந்தது. ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். இன்றையகூட்டத்திற்கு மாஜி ஜஸ்டிஸ் திவான்பகதூர் மாசிலாமணி பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள் முதல்தினம் போலவே பல வகுப்பினர் சேர்ந்த ஸ்திரீகளும் ஏராளமாக விஜயம் செய்திருந்தார்கள் பல இடங்களிலிருந்துப் வந்திருந்த லெட்டர்களும் தந்திகளும் படிக்கப்பட்டன வைதீக தர்ம சங்கத்தின் குல கர்ணியின் கடிதம் வாசிக்கப்பட்டது.

முதல் தீர்மானத்தை குடந்தை ஸ்ரீஸ்வாமிநாத சாஸ்திரிகள் பிரேரேபித்தார். ஸ்ரீ சாஸ்திரிகள் குடியேற்ற நாட்டந்தஸ்து வேண்டும் என்பதைப்பற்றி விளக்கிப் பேசினார் செவு. மெ. மெய்யப்ப செட்டியார், அக்னிஹோத்திரம் ராமாநுஜதாதாசாரியார் இவர்கள் ஆதரித்துப் பேசினார்கள்.

2வது தீர்மானத்தை ஸ்ரீ T. S. ராமசாமி அய்யரவர்களால் பிரேரேபித்து, ஆரணி எத்திராஜ ராவ், காரைக்குடி S. வெங்கடாசாரியார், வேலாயுதமுதலியார் அவர்களால் ஆதரிக்கப்பெற்று அங்கீகாரம் பெற்றது.

3வது தீர்மானம் கோயம்புத்தூர் R. சங்கரநாராயண அய்யரவர்கள் பிரரேபித்து இங்கிலீஷில் பேசினார் இதை வெங்கட்ராமய்யர், காரைக்குடி வி. சுந்தரராம வாத்தியார், வெ. ராம். வீர ராம நா. ராமநாதன் செட்டியார் முதலியவர்கள் ஆதரித்துப் பேசினார்கள் ஸ்ரீமதி பத்மாவதி அம்மாள் அவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப்பேசுகையில் பாரத தேசத்தின் ஸ்திரீகளின் மதிப்பை விஸ்தாரமாக விளக்கி ஸபை உருகும்படி பேசினது சபையோரைப் பிரவசமாகியது. பிற்பகல் $12\frac{1}{2}$மணிக்கு மகாநாடு இடைவேளை போஜனத்துக்காக கலைந்தது. பிற்பகல் $2\frac{1}{2}$மணிக்கு மகாநாடு ஆரம்பமாயிற்று.

4 வது தீர்மனத்தை குடந்தை S. மகாலிங்கய்யர் பிரரேபித்தார் சட்டசபையின் போக்குகளை தர்க்கரீதியில் மிகவும் நுணுக்கமாகக் கண்டித்தார். ஸ்ரீ சுவீர கதிரேசன் செட்டியாரவர்கள் தீர்மானத்தை ஆதரித்து, சுமார் $1\frac{1}{2}$மணி சாவகாசம் பேசினார். ஸநாதன தர்மம் உலக மக்கள் எல்லோருடைய க்ஷேமத்திற்காக ஏற்பட்ட தென்னும் பிராம்மணர்களுக்காக மட்டும் ஏற்பட்டதல்லவென்றும், வேதாகம புராணங்கள் நம்புவர்கள் யாரும் ஸநாதனிகளேயென்றும், அவர்கள் இனி தூங்கக்கூடாதென்றும், ஜனங்களைத் தட்டி எழுப்பப் பேசினார். பிறகு மதுரை ஸ்ரீமதி எ. மீனாக்ஷி அம்மாள் தீர்மானத்தை ஆதரித்துப்பேசியதில், காங்கிரஸ்காரர்கள் செய்த அக்கிரமக் காரியத்தைக் கூறி, அவர்களால் தேசம் எப்படிக் கெடுகிறது என்பதைகூறியது ஸபையோர்கள் கவனத்திற்கு வந்தது

அக்ராஸநாதிபதி யவர்களால் 5,6 தீர்மானங்கள் பிரரேபிக்கப்பட்டு நிறை வேற்றப் பட்டது.

மகாநாடு மறுநாள் காலை வரை ஒத்தி வைக்கப்பட்டது.

ஆஸ்தீக ஸ்திரீகள் மகாநாடு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தபடி, திருவண்ணாமலை, ஸித்தி விலாஸ் மண்டபத்தில் மிகுந்த உத்ஸாஹசத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஏராளமான ஸ்திரிகள் விஜயம் செய்திருந்தார்கள். மகாநாடு ஆரம்பத்தில் மதுரை மீனாக்ஷி அம்மாளும் மன்னாடி மங்களம் செல்லம்மாளும் பிரார்த்தனை நடத்தினார்கள். மகாநாட்டை திறந்து வைக்கும்படியும் தலைமை வகிக்கும்படி மதுரை ஸ்ரீமதி குப்பம்மாளவர்களால் பிரேரேபிக்கப்பட்டு மதராஸ் ஸ்ரீமதி பத்மாவதி அம்மாள் என்ற பட்டம்மாள் மகாநாட்டை திறந்து வைத்து ஆத்மார்த்திக வாழ்க்கையைப் பற்றி ஸ்ரீ கீதை உபநிஷத்து அவைகளிலிருந்து மேற் கோள்களுடன் விஸ்தாரமாக பேசினார்.

ஸத்தி விலாஸம் ஸமரஸஸபை காரியதரிசி ஸ்ரீ முனிசாமி முதலியார் விசேஷமாகச் சிரத்தையெடுத்துக் கொண்டு மகாநாட்டை கவனித்து வருவது போற்றத்தக்கது.

மதுரை ஸ்ரீமதி ஏ. மீனாக்ஷி அம்மாள் மீனக்கொடியை ஏற்றுவித்து மிகவும் உருக்கமாகவும் பேசினார். மகாநாடு நடந்து வருகிறது.

வைதிக தர்ம ஸங்கம் அந்தரங்க கைங்கர்ய ஸபை.

சிஷ்ட ஆஸ்திக மஹாஜனங்களுக்கு அறிவிப்பு.

தஞ்சாவூரில் மகா-ா-ா-ஸ்ரீ R. ராதாகிருஷ்ண அய்யர் அவர்களால் நடத்தப்பட்டுவரும் ஆர்யமத பாடசாலை என்ற தர்மஸ்தாபனத்தை அந்தரங்க கைங்கர்ய ஸபை மிகவும் அபிமானிக்கின்றது.

செங்கல்பட்டு, விழுப்புரம், தஞ்சாவூர் ஜில்லா, வடகுடி, இந்த இடங்களில் ப்ரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர், அவர்களால் அபிமானிக்கப்பட்டு நடந்து வரும் வேதபாடசாலைகளின் அபிவிருத்தியை அந்தரங்க கைங்கர்ய ஸபை கோருகின்றது.

செங்கல்பட்டு ஜில்லா திருக்கழுக்குன்றம் கிராமத்தில் ப்ரம்மஸ்ரீ யக்ஞேஸ்ர தீக்ஷிதர் அவர்களால் நடத்தப்பட்டுவரும் வேத பாடசாலைக்கு அந்தரங்க கைங்கர்ய ஸபையின் அபிமானிகள் எல்லோரும் மிகவும் உதவி செய்யப்பிரார்த்திக்கின்றோம்.

கலிதோஷத்தை நிவர்த்தி செய்து தர்ம புத்தியையும் பகவத் பக்தியையும் உண்டு பண்ணுவது பகவன்நாமா ஒன்றுதான் ஆனபடியால் அந்த நாமஸித்தாந்தம் செய்து பாமர ஜனங்கள் யாவரும் உச்சிக்கும்படி செய்த ஸ்ரீமத் போதேந்திராள் அவர்களது தஞ்சாவூர் ஜில்லா கோவிந்தபுரம் ஸ்ரீ நாமஸித்தாந்த மடம் பிராம்மண ஸமூஹத்தினர் யாவராலும் மிகவும் ஆதரிக்கத்தகுந்தது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் முத்ராதிகாரிகள் முறையானது ஆஸ்திக ஸமூகத்திற்கு மிகவும் நலத்தைத்தரும்.

ஸ்ரீ பாதராஜதாஸன்
ஒகை

அந்தரங்க கைங்கர்ய ஸபை

இந்த சபை, தேச ஸங்கத்துக் காரியங்களில் ஈடுபட்டு நிற்கும் ஸமூகத்திற்கும் தர்மத்திற்கும் கைங்கர்யம் செய்ய ஆவல் உள்ள சிரத்தாளுக்களான கிருஹஸ்தர்கள் பிரதிக்ஞை ஏற்று இந்த சபையில் சேர வேண்டும். இவர்கள் ஸபையில் முக்கிய அங்கத்தினர்கள். இவர்கள் தங்கள் காரியங்களில் உதவிசெய்ய அதிகாரிகளான சில வித்வான்களையும் சில லௌகிகர்களையும் கௌண அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்ளுவார்கள். இந்த ஸபைக்கு ஒரு பரமஹம்ஸ பிக்ஷு சன்னியாசிகள் ஸ்ரீ பாத ராஜர் என்ற பட்டத்துடன் தலைவராக இருப்பார்கள். கைங்கர்ய பரர்களில் ஒருவர் ஸ்ரீ காரியம் என்ற பட்டத்துடன் ஸபைக் காரியங்களை கவனித்து வருவார். ஸ்ரீபாத கைங்கர்யம் என்ற பட்டத்துடன் பதினாறு வயதிற்கு மேற்பட்ட பிரம்மசாரிகள் ஸ்ரீபாத ராஜர் ஆக்ஞைக்குக் கீழ்ப்பட்டு ஸங்க காரியங்களில் ஈடுபட்டு வருவார்கள்.

வைதிக தர்ம தேவதைக்கு, செய்யும் தொண்டு அந்தரங்க கைங்கர்யம் எனப்படும். அந்த கைங்கர்யத்தில் ஈடுபடும் புண்ய புருஷர்களது ஸங்கம அந்தரங்க கைங்கர்ய ஸபை என்று சொல்லப்படும். இந்த ஸபை ஒரு புருஷனது நடுஉடல் போல் இருக்கிறது. ஸபைத்தலைவர் ஸ்ரீபாத ராஜர் சிரஸ் ஸ்தானத்தில் இருக்கிறார்கள். இந்த ஸபைக்கு வைதிக தர்ம ஸங்கம் ஆஸ்திக தர்ம ஸங்கம் என்ற இரண்டும் இரு புஜங்கள் போன்றன. ப்ரும்ம வீர்யத்தை தாங்கி நிற்பது வைதிக தர்ம ஸங்கம் க்ஷாத்ர வீர்யத்தைத் தாங்கி நிற்பது ஆஸ்திக தர்ம ஸங்கம். பாரத தேசத்தின் மூலமாய் உலகிற்கும் சதுர்தச புவனங்களுக்கும் ஸ்திதி ஹேதுவாய் இந்த அந்தரங்க கைங்கர்ய ஸபை ஸ்ரீபாத ராஜர் அவர்கள் மூலம் வேத புருஷனது அனுக்கிரஹத்தைத்தாங்கி நிற்கின்றது.

உதாஸீனக் குறிப்புகள்

விழுப்புரம் தெய்வநெறிகழகத்தின் சார்பாக அந்தணர் வேதபாடசாலையைப் பற்றி ஆர்யதர்மத்தில் வெளிவந்திருந்ததும்வாசிக்கப்பட்டது. ஷை வெங்கட்டரமண அய்யர் அவர்கள் எழுதியதில் ஒரு சிறிது உண்மை இருந்தாலும் அவ்விதம் அவர் பிடிவாதக்காரர் ஆகக்கூடாது. வேத பாடசாலை நடத்துவது என்பது ஒரு லௌகிகக் கார்யம் அல்ல. ஆடம்பரத்திற்காகவும், பெருமைக்காகவும் செய்வதும் அல்ல. வைதிக தர்மஸங்கம் பரமஹம்ஸ பிக்ஷுக்கள் ஷைபாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே கொஞ்சம் திரவ்யம் அனுக்ரஹித்து கொடுக்கும் காலத்தில்மஹாதேவய்யர் கிரஹத்தில் கூடிய கூட்டத்தில் இவ்விதம் தெரிவித்திருக்கிறார்கள். சிஷ்டாசாரத்திற்கு ஒவ்வாத நிலைமையில் யோகப் பயிற்சி, பிரம்மசரியம், ஸமூக் கைங்கர்யம் இதுகளையே பிரதானமாகக்கொண்டு அந்த ரிஷீகேசத்துச் சபையானது பல இடங்களில் நடப்பதாகத் தெரிகிறது. ஆதலால் அவ்விடம் நடந்துவரும் வேதபாடசாலைக்கும் தெய்வ நெறிக்கழகத்திற்கும் சிரத்தாளுக்களான சிஷ்யர்கள் திருஷ்டியில் ஸம்பந்தம் பொருந்தாது. ஆதலால் ராகவய்யங்கார், மஹாதேவய்யர் ஆகிய இருவரும் மற்றுமுள்ள ஆஸ்திகர்களுடைய ஸகாயத்தைக் கொண்டு ஷைபாடசாலையை நடத்துவதைத்தான் வைதிக தர்ம ஸங்கம் பரமஹம்ஸ பிக்ஷுக்கள் ஆமோதிக்கின்றார்கள். இது விஷயத்தில் ஷைவெங்கட்றமணய்யர் அவர்கள் எவ்வித பிடிவாதமும் செய்வது விரும்பத்தக்கதல்ல.

சிதம்பர க்ஷேத்திரத்தில் சென்ற வருஷம் திருவாதிரை மஹோத்ஸவகாலத்தில் கூடிய வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் மஹாநாட்டுக்குப் பிறகு அந்த வாரத்தில் ஒரு சனிக்கிழமை பத்திரிகையில் பட்டணம் தினமணி பத்திரிகை ஆசிரியர் எழுதிய “வர்ணாஸ்ரமிகளின் வாணவேடிக்கை” என்ற ஆசிரிய உரையில் கண்ட விஷயங்களை நன்கு வாசித்து உணர்ந்த ஆஸ்திகர்கள் லௌகிகத்தில் யாதொரு தவறுதல்களையும் மத விஷயத்தில் செய்ய விரும்பமாட்டார்கள்.

சுந்தரதாஸன்.

வகுப்புப் பிரச்னையைத் தீர்க்க

டாக்டர் மூகர்ஜீயின் யோஜனை

கல்கத்தா சர்வகலாசாலையில் பேராசிரியராகயிருக்கும் டாக்டர் ராதாகுமுத முகர்ஜீ என்பவர் இந்தியாவில் ஜனநாயக அரசியல் நிலைநிற்கவேண்டுமானால் இந்திய தேசியத் தலைவர்கள் முன்கூடி சில விஷயங்களில் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

அவர் கூறுவதாவது:— இந்தியாவில் அநேக மதங்களும் வகுப்புக்களும் இருக்கின்றன. ஒவ்வொன்றின் ஆசாரமும்பழக்க வழக்கங்களும் வெவ்வேறு. ஆயினும் இந்தியாவின் தேசிய ஒற்றுமைக்கு தடங்கலில்லாமல், இவைகளையும் அழியவிடாமல் பாதுகாக்கவேண்டிய கடமை அந்தந்த வகுப்புத் தலைவர்களைச்சார்ந்ததாகும். அந்த விஷயத்தில் இதர மதஸ்தர்களோ தேசியத்தலைவர்களோ பிரவேசிக்க முயன்றால் சந்தேகமும் சச்சரவுமே உண்டாகும். ஆகையால் ஒவ்வொரு வகுப்பும் தனக்கு ஏகதேசமான கொள்கைகளையும் ஆசாரங்களையும் கூறி அவைகளை பாதுகாக்க அரசியல் திட்டத்தில் விதிகள் ஏற்படுத்திக் கொண்டுவிட வேண்டும். அவ்விஷயங்களில் ஒவ்வொரு வகுப்புக்கும் யதேச்சாதிகாரமே அளிக்கப்படவேண்டும். அவைகளைத்தவிர இதர விஷயங்களில் எல்லாம் ஒவ்வொருவகுப்பும் மற்ற வகுப்புகளுடன் ஒத்துழைத்து இந்தியாவை பாகம் செய்துகொள்ள முயலாமல் ஏகோபித்து தேசிய அரசியலை நடத்த வேண்டும்.

ஆகவே மேற்கூறியபடி வேற்றுமைகளை ஒப்புக்கொண்டு பிறகு ஒற்றுமைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஜாதி மதம் பாஷை முதலிய விஷயங்களில் இந்திய தேசியம் தலையிடக்கூடாது. ஒவ்வொருவகுப்பும் தன் குழந்தைகளுக்கு தன் தாய் பாஷையிலும் தன் பிராசீன லிபி மூலமாகவும் கல்வி போதிக்கும் உரிமையைப்பெறும். சர்க்கார் செலவில் இலவசமாக ஒவ்வொரு வகுப்புக் குழந்தைகளும் தாய்பாஷை வாயிலாகவே கல்வியைக்கற்கும். தாய் பாஷை வளர்ச்சி பெறுவதுடன் இந்திய இலக்கியமும் பெறுமை பெரும்.

அப்படியே மத விஷயங்களிலும். ஒவ்வொரு மதஸ்தனும் தன் மதக்கொள்கைக்கு இணங்க தன் வீட்டிலோ பொது இடங்களிலோ நடந்து கொள்ளும் உரிமையைப் பெறுவான். அன்ய மதஸ்தர்களுக்கோ பொது ஜனங்களுக்கோ மனதுக்கு புண் உண்டாக்கும் எதையும் செய்ய உரிமை அடைய மாட்டான். துருக்கியின் அரசியல் திட்டத்தில் இவ்விஷயம் நன்றாக விதிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

சில ஆசாரங்களும் அப்படியே. இவைகளை சட்டசபைகள் தங்கள் இஷ்டப்படி மாற்றவோ ரத்துசெய்யவோ அனுமதிக்கப்படக்கூடாது. அந்தந்த வகுப்புத் தலைவர்கள் மட்டிலே மேற்கண்ட ஆசாரங்களை திருத்தி அமைத்துக்கொள்ள உரிமையுடையவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்களும் சமூகத்தைக்கேட்டு கலந்து முடிவு செய்யவேண்டும். விவாஹ ஸம்பந்தமான விஷயங்களை அந்தந்த வகுப்புத் தலைவர்களை

(தொடர்ச்சி 2ம் காலம்)

(3ம் காலம் தொடர்ச்சி)

கேளாது சட்ட ஸபையில் அன்யர்களைக் கொண்டு பெருவாரி ஓட்டுக்களால் மாற்ற முயலுவது கூடாது.

ஆகவே இப்படி வகுப்பு பிரச்சனைகளில் ஒவ்வொரு வகுப்புக்கும் தனக்குரிய சட்ட திட்டங்களை செய்துகொள்ள யதேச்சாதிகாரத்தை அரசியல் மூலம் அளித்துவிட்டால் இதர விஷயங்களிலும் பொதுவான தேசிய விஷயங்களிலும் எல்லா வகுப்புகளும் ஏகோபித்து ஒத்துழைக்க இயலும். இந்தியாவை தனித்தனி கண்டங்களாக பிரித்து பங்கு போட்டுகொள்ள வேண்டியதில்லை.

அய்யுவய்யர் அத்வைத பாடசாலை

20-11-40 மாலை 6 மணிக்கு பிரும்மஸ்ரீ அய்யுவய்யர் அத்வைதவேதாந்த பாடசாலை தர்மத்தின் அப்தபூர்த்தி விழா கும்பகோணம் ஸ்ரீ காமகோடி பீடம் ஆசார்யாள் மடத்தில் நடைபெற்றது. ராஜமகேந்திரம் காலேஜ் பிரதம உபாத்யாயராயிருந்து பென்ஷன் பெற்றிருக்கும் ஸ்ரீ டி. கே. வெங்கட்ராமய்யர் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். அத்வைத ஸபை கவுன்ஸில் மெம்பர்கள் ராவ்சாகேப் ஆர். ஸ்வாமிநாதய்யர், எஸ். மஹாலிங்கய்யர் ஜீ. வி வெங்கட்ராம அய்யர், ஸ்ரீ ராமமந்திரம் பாடசாலை உபாத்தியாயர் பிரும்மஸ்ரீ ஆங்கரை ரெங்கசாமி சாஸ்திரிகள், ஸபா பண்டிதர் பிரும்மஸ்ரீ திருவையார் விசுவநாத சாஸ்திரிகள், அய்யுவய்யர் பாடசாலை உபாத்யாயர் பிரும்மஸ்ரீ வேப்பத்தூர் வைத்யநாத சாஸ்திரிகள், வக்கீல் ஸ்ரீ A. G. சங்கரய்யர், ஊ. சா. வேங்கடராமய்யர் முதலானவர்கள் விஜயம்செய்திருந்தார்கள்.

அத்வைதஸபை கார்யதரிசி ஸ்ரீ M. K. வைத்யநாதய்யர் அவர்கள் மாதுஸ்ரீ லெக்ஷ்மி அம்மாள் கோரிக்கைப்படி அவர் பிரும்மஸ்ரீ அய்யுவய்யர் அவர்களும் பெண் ஸௌபாக்யவதி சிவகாமி அம்மாளும் அவருடைய புருஷர்பென்ஷன் டிஸ்திரிக்ட் முன்ஸீப் ஸ்ரீ P. S. சுப்ரமண்யய்யர் அவர்களும் ஒரே மனதாயிருந்து ரூ 61600 முதல்வைத்து தர்மத்திற்கும் ஷை அய்யுவய்யர் அவர்கள் எழுதிவைத்தார்களென்ற வரலாற்றை விஸ்தாரமாக எடுத்துச் சொல்லி அதன் வரும்படியிலிருந்து வேதாந்த பாடசாலை 3 வித்யார்த்திகளுடனும் ஒரு பண்டிதருடனும் நடந்து வருவதையும அய்யுவய்யர் அவர்களால் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வர ஸ்வாமி கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ காசி விஸ்வநாத ஸ்வாமிக்கு தினந்தோறும் மஹா சிவ ராத்தி நாலு காலமும் பூஜை நடந்து வருவதையும் ஸ்ரீ பழனியாண்டவருக்கு வருஷந்தோறும் ஜ்யேஷ்டாபிஷேகம் நடப்பதையும் வருஷத்தில்4மீ கும்பகோணத்தில் தண்ணீர்பந்தல் நடப்பதையும் அய்யுவய்யர் அவர்கள் தேக வியோகமானபிறகு தர்மபத்திரப்படி துவாதசி தர்மம் நடந்து வருவதையும் அவருடைய தாயாதிகளில் குறிப்பிடப்பட்ட சிலர்களுக்கு திரவ்ய சகாயம் மாதா மாதம் செய்யப்பட்டு வருவதையும் பற்றி விளக்கிச் சொன்னார்கள்.

விசேஷமாக தனத்தைக்கொடுத்து பெரிய தர்மங்களை ஸ்தாபித்திருப்பதை சிலாகித்தும் பாடசாலைக்கு நெருக்கடியான ஸமயங்களில் பிரும்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள் உதவிபுரிந்ததையும் பாடசாலையை நன்றாக நடத்திவரும் வைத்தினாதசாஸ்திரிகளையும் துவாதசி கட்டளையை நேரில் நின்று நடத்திக்கொடுக்கும் ஸ்ரீ S. மஹாலிங்கய்யரையும் ஷை தர்மங்களுக்கு மானேஜர்களாயிருக்கும் R. ஸ்வாமிநாதய்யர், G. V. வெங்கட்ராமய்யர் இவர்கள் எல்லாரையும் சிலாகித்துப் பேசி முடித்தார்கள்

ஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் அய்யுவய்யர் அவர்களும் அவர் பெண்ணும் மாப்பிள்ளையும் நல்ல மனஸ்விகளென்றும் தர்மசிந்தனை நிரம்பியவர்களென்றும் வேதாந்த பிரசாரத்திற்கு அவர்கள் உபகரித்திருப்பது மிகவும் அபிநந்திக்கத்தக்கதென்றும் மற்ற தார்மிக தனவான்களுக்கும் இம்மாதிரி தர்மங்களை செய்ய வழிகாட்டுவதாகவு மிருக்கிறதென்றும் அய்யுவய்யர் தர்மங்கள் விஷயமாய் தன்னை ஆலோசனை கேட்டார்களென்றும் பேசினார்கள். ஸ்ரீவைத்யநாத சாஸ்திரிகள் ஷை தர்மத்தின் பெருமையை வர்ணித்து எடுத்துச்சொல்லியும் அத்வைத ஸபை அழகாக தர்மங்களை பரிபாலித்து வருவது ச்ரேயஸ்கரமென்றும் தர்மம் செய்ததற்கு ஸமானமேயென்றும் சொன்னார்கள். ஸ்ரீ பரமஹம்ஸவிசுத்தானந்த தீர்த்த ஸ்வாமிகள்(இரண்டு வருஷ காலமாக ஆசார்யஸ்வாமிகளுடன் வசித்துவரும்) பெரிய தர்மத்தை சிலாகித்தும் வித்யார்த்திகளுக்கு விருத்தியும் நன்றாக ஏற்படுமென்று சொன்னதுடன் பரீக்ஷையில்தேறிவரும் வித்தியார்த்திகளுக்கு ஜீவனோபாய விஷயத்தைப்பற்றி பிரதி நியாயஸ்தலங்கள் முதலான கச்சேரிகளில் ஒரு பண்டிதரை நியமித்து வருவதும் தனவான்கள் தங்கள் சமூகங்களில் ஒரு பண்டிதரை வைத்து ஆதரித்து வருவதும் உசிதமான கார்யமென்று சொன்னார்கள்.

சாத்தங்குடி பிரம்மஸ்ரீ ராமச்சந்திரய்யர் அய்யுவய்யர் செய்த தர்மம் மகத்தானதென்றும் அத்வைத ஸபையில் அதை நன்றாய் நடத்திவருவது அபிநந்திக்கத் தகுந்தகுந்ததென்றும் சொன்னார்கள்.

ஸபை உதவிபண்டிதர் நல்லூர்பிரும்மஸ்ரீ ஸுப்ரமணிய தீக்ஷிதரும் தர்மத்தை வெகுவாய் சிலாகித்துப் பேசினார்கள்.

தலைமை பிரதிநிதிஸ்ரீ டி. கெ. வெங்கட்ராமய்யர் அவர்கள் உத்கிருஷ்டமானவித்யைக்கு அபரிமிதமாய் தனம் வைத்து இந்தமாதிரி தர்மஸ்தாபனம் செய்வது அபூர்வமென்றும் தர்மங்களை நடத்த பொது ஸ்தாபனமான அத்வைத ஸபையில் ஒப்புவித்திருப்பது உசிதமானதென்றும் பாடசாலை வித்யார்த்திகள் நியமத்துடன் வித்யையை அப்பியாஸம் செய்யவேண்டுமென்றும் வித்யார்த்திகளுக்கு போஜனாதி வஸதிகள்குறைவாகயிருந்தால் தன் வைகைரு பார்வையிலிருக்கும்கல்யாணராமய்யர் ஸத்திரதர்மத்தில் ஏற்பாடு செய்ய முயல்வதாகவும் பேசினார்கள்.

ராவ்சாகிப் ஆர். ஸ்வாமிநாதய்யர் அவர்கள் ஸ்ரீ டி. கே. வெங்கட்ராமய்யர் அவர்களுக்கும் வந்திருந்தவர்களுக்கும் விசேஷமான வந்தனோபகாரம் சொன்னார்கள் ஸபைக்கு பென்ஷன் இஞ்சினீயர் அய்யுவய்யர் அவர்கள் ஞாபகார்த்தமாய்கொடுத்திருக்கும் படத்தையும் கும்பகோணம் சிவன் ஸ்டுடியோவில் எடுக்கப்பட்ட அய்யுவய்யர், லக்ஷ்மிஅம்மாள், சிவகாமிஅம்மாள் போட்டோ என்லார்ஜ்மெண்டும் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன. கல்கண்டு பழம் சந்தனம் தாம்பூலங்கள் கொடுத்தபின் கூட்டம் கலைந்தது. ந. நி.

ஸ்ரீ கீதா தினக் கொண்டாட்டம்

கும்பகோணம்.

மார்க்க சீர்ஷசுத்த ஏகாதசியான 10—12—40 காலை 8-மணிக்கு ஸ்ரீ எ. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் ஸ்ரீ ராம மந்திரத்தில் ஸ்ரீ அக்னிஹோத்திரம் தாததேசிகாசாரியார் அவர்களின் தலைமையில் ஸ்ரீ கீதாதினம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ எ. ரங்கஸ்வாமி சாஸ்திரிகளாலும் அவர் சிஷ்யர்களாலும் நதீதிரம் ரகுநாத சர்மாவாலும் கீதா முழுமையும் பாராயணம் செய்யப்பட்டது. தலைவர் தம்முன்னுரையில் கீதையின் மகிமையைப்பற்றிப் பேசுகையில் வேதத்தை உபபிரும்ஹணம் செய்வதற்காகவே கீதை எழுந்ததென்று நிரூபிக்க வேதவசனங்களையும், கீதாவசனங்களையும் உதாஹரித்து அவைகளின் பொருத்தத்தை எடுத்துக்காட்டி கர்மானுஷ்டானம் செய்வதிலேயே உபக்ரமம் உபஸம்ஹாரம் இரண்டுக்கும் உள்ள ஆனுகுண்யத்தை விரித்துக் கூறினார். விக்கிரவாண்டி பிர்ம்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள், மெலட்டூர் ரகுநாத சாஸ்திரிகள், ஸ்ரீ பூவராகாசாரியார், நதீதிரம் ரகுநாத சர்மா, மேலக்காவேரி ராமச்சந்திர சாஸ்திரிகள். பாணாதுரை பால கிருஷ்ண தீக்ஷிதர், நாராயண சாஸ்திரி, ஸ்ரீனிவாஸராகவாசாரியார், ராமசந்திர சாஸ்திரிகள் சிஷ்யர், முதலியோர் கீதையின் மகிமையையும் அதன் அனுஸந்தானத்தின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள். ஸ்ரீ கே. எல். வியாஸராய சாஸ்திரி ஸம்ஸ்கிருதத்தில் பேசவாரம்பித்து கீதை லோகசாஸ்திரமா மோக்ஷ சாஸ்திரமா என்பதைபற்றிய அபிப்ராயபேதங்களை விளக்கி அர்ஜுனனின் விஷாதம் அஸ்தானத்தில் ஏற்பட்டதில்லை யென்றும் கூறி முடித்தார். ஸ்ரீ எம். ராமராவ் பேசுகையில் அசோச்யான் என்ற உபதேசத்தின் உபக்ரமத்துக்கும் மாசுசஹ என்ற உபஸம்ஹாரத்துக்கும் உள்ள பொருத்தத்தையும் அர்ஜுனன் முதல் அத்தியாயத்தில் பேசியிருக்கும் வார்த்தைகள் பிராக்ஞ சம்மதமான வாதமல்லாததாலும் ஸ்ரீ பாகவதத்தில் "ஸ்வஜன வதாத் விமுகஸ்ய தோஷபுத்யா குமதிம் அஹரத்" என்று நிந்திக்கப்பட்டிருந்ததாலும் "ப்ரக்ஞயா உத்தா: வாதா:" அல்லது 'ப்ரக்ஞானும் அவாதா:' ப்ராக்ஞ விருத்த வாதங்கள் என்று அர்த்தம் கொள்ளவேண்டிய அவசியத்தைத் தெரிவித்தார் பிர்மஸ்ரீ ரங்கஸ்வாமி சாஸ்திரிகளும் ஷை உபதேச சுலோகத்தை சங்கரபாஷ்யம் மதுஸூதனரின் வியாக்யானம் இவைகளுடன் அர்த்தம் செய்தார். தலைவர்கடைசியில் முடிவுரையாக ஷை சுலோகத்தின் தாத்பர்யத்தை ஸ்ரீ ராமானுஜ பாஷ்யத்தின்படி விளக்கி தேஹாத்ம ஞானத்தை அர்ஜுனனுக்கு உபதேசிக்கவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்து இந்த கீதாதின உற்சவமானது ஸ்ரீ ராமமந்திரத்தில் அவச்சின்னமாய் நடந்து வரவேண்டும் என்று ஸ்ரீ எ. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் சிரத்தா பக்தியைப் புகழ்ந்து அனைவரும் ஸகல சிரேயஸ்ஸை அடையவேண்டுமாறு பிரார்த்திப்பதாயும் கூறினார். பழம், கற்கண்டு, வினியோகங்களுடன் கூட்டம் இனிது கலைந்தது. அன்று விஜயம் செய்தவர்களில் ஸ்ரீ கே. ஆர். ரகுநாத ராவ், ஸ்ரீ அப்பாஸ்வாமி ஐயர் மாஜி காலேஜ் பிரின்ஸ்பல் முக்கியமானவர்களாவார். (ந-நி)

ஸத்யாக்ரஹ இயக்கம்

காந்திஜியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த இயக்கமானது. இப்போது எல்லா மாகாணங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. மாஜீ மந்திரிகள் சட்டஸபை மெம்பர்கள். கார்யக்கமிட்டி மெம்பர்கள். ஆகியவர்கள் ஸத்யாக்ஹம் செய்து சிறை சென்று விட்டார்கள்.

சென்னையில், டாக்டர் ராஜன், கோபால ரெட்டி, பிரகாசம், வி. வி. கிரி, ஸி. கோபாலசாரியார் ஆகியவர்கள் ஸத்யாக்ரஹம் செய்து சிறை புகுந்தனர்.

ராமச்சந்திர ஹரீஷி அவர்களின் பிரசுரம்.

பக்திஸந்தேஹத்வாந்தபாஸ்கரம் 0 4 0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரின்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

தொண்டர்தம் பெருமைமையைச் சொல்லவும் பெரிதே!

எஸ். கே. விஸ்வேச்வர சாஸ்திரிகள், மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர் கும்பகோணம்.

[சென்ற வாரத் தொடர்ச்சி.]

அப்படியே இருவரும் வாரன் ரங்கன் எதிரே வந்து நின்றார்கள்.

கிருஷ்ணன் ரங்கனைப்பார்த்து இவர் காசி ஜமீன்தார் – இவருக்காகத்தான் மோதிரம் பெற்றேன் என்று ஒருவருக்கொருவர் முக அறிவிப்பு செய்வித்தான். ரங்கனும் ஜமீன்தாரை நன்றாய் வணங்கினான், "ஆற்றுவார் ஆற்றல் பணிதல்" என்றபடி. பிறகு ஜமீன்தார் இன்னும் மோதிரங்கள் இருக்குமோ என்றார்? ஆகா எஜமானே: வேண்டுமானால் கிடைக்கலாம். இதோ இந்தத்தகரப் பெட்டியின் எதிரே வந்து நின்று, கண்களை மூடிக்கொண்டு பெட்டியைத் திறந்து கைவிட்டு வெண்டிய மோதிரங்களை எடுத்துக்கொண்டு கண்களைத் திறந்து பார்க்கலாம் என்றான் ரங்கன். (திண்ணையின்மேல் பெட்டி இருந்தது.)

அப்படியே நான்கு வேண்டுமென்று சொல்லிக்கொண்டே, ரங்கன் கேட்டுக்கொண்டபடி, கண்களை மூடிமோதிரங்கள் நான்கை எடுத்துக் கண்திறந்து பார்த்தார் ஜமீன்தார். வியப்படைந்தார்! இன்னும் நான்கு இருக்குமோ என்றார் ஜமீன்தார்? முன்போலப்பார்க்கலாமே என்றான் ரங்கன். ஜமீன்தார் மறுபடியும் நான்கு மோதிரங்கள் எடுத்தார்: இப்படி இன்னும் இரண்டுதரம் எடுத்தார்.

கடைசியில் ஆச்சரியப்பட்டு இதென்ன மாயம் என்று பிரமித்து சற்று நின்றார் 16 மோதிரங்களை வைத்துக்கொண்டு, தனக்குள் பின்வருமாறு யோசித்தார். இவர்ஒரு பெரியயோகியோ! மகானோ? தபஸ்வியோ? யாதும் அறியேன் என்று திகைத்தார். உலகச்செல்வமெல்லாம் இவர் கையில் அடக்கம்போல் தோன்றுகிறது நான் இவ்வளவு செல்வம் படைத்தும் எப்போதும் எனக்கு விசாரமும் கவலையுமே. இவரோ, இவர் தொழிலில் தினம் கொஞ்சமே சம்பாதித்தாலும் எவ்வளவு முகப் பொலிவு உடையவராயிருக்கிறார். என்னதேஜஸு! சாந்தம் முகத்தில் ஜொலிக்கிறது. இதில் எள்ளளவும் எனக்கில்லையே என்றெல்லாம் எண்ணி கிருஷ்ணனை அருகே அழைத்தார். அவன் காதோடு, இவர் சாந்தாகார ஸ்வரூபி; பெரிய மகான்போல் தெரிகிறது: இவரிடம் உபதேசம் பெற்றால் நற்கதி அடையலாம். அதற்கு சம்மதிப்பாரா என்றார்? கிருஷ்ணனும் அவ்வெண்ணத்தை மிகவும் பணிவாய் ரங்கனுக்குத் தெரிவித்தான். அவரும் குருபதவியை வகிக்க சற்று சம்மதிக்கவே, இருவரும் சீடர்களாய் அப்போதே உபதேசம் பெற்றார்கள் "அருள்செல்வம் செல்வத்துட் செல்வம்" என்று நினைக்கும் ரங்கனிடம். ரங்கன், "உள்ளம் திருக்கோயில், ஊனுடம்பு ஆலயம், வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல், தெள்ளத்தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம், கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே," என்ற திருமூல நாயனார் திருமந்திரச் செய்யுளை அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தான். உண்மை ஞானம் அடைந்து, அவரிடம் விடைபெற்று ஊருக்குப் போய் குருவுக்குக் காணிக்கைகள் அனுப்பினார்கள். ஜமீன்தார் தன் எஸ்டேட்டை சர்க்கார் பாது காப்பில் வைக்க ஏற்பாடுசெய்து "தலையே தவ முயன்று வாழ்தல்" என்ற நீதி மார்க்கமாய்த் தங்கள் காலங்களைத் தள்ளி இருவரும் குருபாத நினைவுடனே, உயிர் நீத்துத் "தனக்குவமையில்லாதான் தாள்" சேர்ந்தார்.

ஆதலால் பக்தி, யாரிடம் இருந்தாலும், நல்ல உலகத்தை அடையச்செய்யும்: உயர் குலம் மாத்திரம் இருந்து பலன் என்ன? குலமும் பக்தியும் ஒருங்கே அமையப்பெற்றால் "பொன் மலர் நாற்ற முடைத்து" என்பதுபோல் சோபிக்கும் என்பது விளங்குகிறது.

நாயன்மார், ஆழ்வார் சரித்திரங்களில் இம்மாதிரி பக்தர்கள் உண்டு. ஸேனோபாக்யானம் என்ற ஒரு நாவித பக்த சத்ரிரமும் சொல்வார்கள்.

முற்றிற்று.

ஸ்ரீமத் ராமாயணப்பட்டாபிஷேகம் சென்னை

ஸ்ரீ ஜகத்குருவின் ஸன்மானம்.

சென்ற ஒரு மாத காலமாக இந்த சென்னை நகர் திருவட்டீசுரன் பேட்டை நாகய்யர் தெருவிலுள்ள ஸ்ரீ ஜகத்குரு சங்கர மடத்தில் பிரம்மஸ்ரீ நாகையநல்லூர் ராமனாதசாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேபம் செய்துவந்த விஷயமாய் இந்த பேட்டை வாசிகள் விசேஷ உற்சாகம் கொண்டு நன்கு நடத்தி வைபவமாய்ப்பட்டாபிஷேகத்தைக்கொண்டாடினார்கள். ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதிகளுக்கு ராமாயண சாஸ்திரிகள் இதுவரை 110 பட்டாபிஷேகங்கள் நடத்தியிருப்பதைத் தெரிவித்து மகாஜனங்கள் அன்னாருக்கு பாராசர்ய உபபுராண வாக்யப்ரமாணத்தைக் கொண்டு 'ராமாயண ஸாம்ராஜ்ய யஜ்வா' என்ற பிருதையளிக்குமாறு வேண்டிக்கொள்ள ஸ்ரீ ஜகத்குரு ஸன்னிதானமிருந்து ஓர் ஸ்ரீமுகம் அனுப்பப்பட்டு இங்குள்ள மைலாப்பூர் அட்வகேட் தர்மரக்ஷாமணிஸ்ரீகே. பால சுப்பிரமணிய அய்யர் அவர்களால் நேற்று இரவு கதாப்ரவசனம் முடிந்ததும் தகுந்த மரியாதையுடன் சாஸ்திரிகளுக்கு ஷை பிருது அளிக்கப்பட்டது. நமது ஆசார்யாளுடைய விசேஷ வித்வத் வாத்ஸல்யமும் அபாரமான ஈச்ரோபாஸன சக்தியும் மகா ஜனங்களுக்கு நன்கு வெளியிடப்பட்டது. பொது ஜனங்கள் விசேஷ ஆனந்தமடைந்தனர். பௌராணிகர் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் பல நூல்களிலிருந்து விசேஷ கோட்பாடுகளுடன் கதாப்ரவசனம் செய்தது புகழப்பட்டது. அவருக்கும் கௌரவமான ஸன்மானங்கள் செய்யப்பட்டன. பிரதி தினமும் பகவானுடைய படம் வெகு விமர்சையாக அலங்கரிக்கப்பட்டு வந்ததுடன் நேற்றயதினம் விசேஷ பூஜை அர்ச்சனை பிராம்மண ஸந்தர்ப்பணையுடன் ஆராதிக்கப்பட்டது. ஆசாரியாளுடைய மடத்தில் நடைபெறும்.

லலிதாத்ரிசதி

நாகரலிபியில் மூலமும்,

நாமாவளியும் விலை	ரூ. 0—3—0.
ஷை பாஷ்யம்	ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

ஏகாதசி உபன்யாஸம்

கும்பகோணம் சோலையப்ப முதலியார் அக்ரஹாரம் ஸ்ரீ விசாலாக்ஷியம்மன் சன்னதியில் ஸ்ரீ பரமாசார்யாளின் ஆக்ஞைப்பிரகாரம் 25—11—40 ஏகாதசியன்று பிரும்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதர் அவர்கள் பதிவ்ருதா தர்மம் என்பதைப்பற்றி அதிவிமர்சையாய் உபன்யாஸம் செய்தார். ஸ்திரீகளுக்கு முக்கியமான தர்மம் பதிவ்ருதா தர்மம் என்பது பற்றியும், பாதிவ்ருத்யத்தின் பெருமையையும் அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் வெகு அழகாக உபன்யசித்தார்கள்.

10—12—40 ஏகாதசியன்று ஸ்ரீ ஆக்ஞை பிரகாரம் ஷை ஸன்னதியில் மாலை 4 மணி முதல் கரப்பத்தூர் (அச்சாபீஸ்) பிரும்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் அவர்கள் "பிராம்மண லக்ஷணம்" என்பதைப்பற்றி உபன்யஸித்தார்கள். சா.சுப்ரமணிய அய்யர்

ஸீதா கல்யாணம் திருச்சி

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை தயாநிதியான ஸ்ரீராம கிருபையை முன்னிட்டு பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திருவையார் அம்மாளக்ரஹாரம் பிரும்மஸ்ரீ வித்வந்மணீ ஸ்வாமி சாஸ்திரிகளால் 2—10—40-ல் திருச்சி மலைவாசலுக்கு மேல்புரம் சுப்பைய்யர் ஸ்டோரில் உபக்ரமித்து ப்ரதிபத தாத்பர்யத்துடன் பக்திரசம் பெருகும்படி உபன்யஸிக்கப்பெற்று வருவது நமது நேயர்கள் அறிந்ததே.

சிரவண மாத்திரத்தினால் ஸகல கல்யாண ப்ரதமான ஸ்ரீமத் வால்மீகி ராமாயண பிரவசனத்தில் 8—12—40 ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு ஸ்ரீ ஸீதாகல்யாண மகோத்ஸவம் கட்டம் நடைபெற்றது. ஓர் தினத்தில் காலையில் பூஜை, அர்ச்சனை, மூல பாராயணம் 11 மணிக்கு ஸந்தர்ப்பணமும் சிறப்பாக நடைபெற்றது. இரவில் ராம பக்தர்கள் விசேஷமாக கதாச்ரவணம் செய்து உபந்யாஸகரைத் தக்கமுறையில் ஸம்மானித்தனர். 15 ஆண்டுகளுக்குக் குறையாமல் புராண ப்ரவசனம் மூலம் நமது மதத்தை ரக்ஷித்து வருகிறார். (க-வி-கி)

ஆலயப் பிரவேசம்.

'इतःकोन्वस्ति मूढात्मा यस्तु स्वार्थे प्रमाद्यति ।'

"மதக்கொள்கைகள் எவ்வண்ணம் சீர்குலைக்கப்பட்டால் தான் எனக்கென்ன? என் உடம்பை யாரும் வாளால் வெட்டவில்லையே!" என்று வாளாயிருப்பவனே மூடன். அசட்டை தூக்கத்தை உதறித்தள்ளி மத விழிப்பை உண்டுபண்ணி ஆத்ம ஸ்வராஜ்யத்தில் பிரவேசிக்க மார்க்கத்தைப் புகட்டுவது ஆலயப்பிரவேச புத்தகம் ஒன்றே. பண்டிதர்களால் மிகப்புகழப் பெற்றது. 6 அணா ஸ்டாம்பு அனுப்பி வைத்து பிரதியை அடையமுக்துங்கள்.

கிடைக்குமிடங்கள்—

கண்டமங்கலம்
பால சுப்பிரமணிய அய்யர்,
10, பிலாத்தோப்பு, மைலாப்பூர், மதறாஸ்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road. Kumbakonam.
Published by A. Gopladesikachariar, and S. Kalyanasundaram.